Registered as News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily

நாதம்: 93    திருவள்ளுவர் ஆண்டு 2022    கார்த்திகை 02    (18-11-1991)    திங்கட்கிழமை    ஓசை: 273

## 1991 மாவீரர் நாள் பேச்சுப் போட்டி முடிவுகள்

மன்னார் மாவட்டத்தில் மாவீரர் வாரத்தை ஒட்டி விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் நடாத்திய பேச்சுப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பிரிவு 1 (ஆண்டு 1) முதலாமிடம் த. வினோதன் இலக்கடிப்பிட்டி றோ. க. த. க. பாடசாலை. இரண்டாமிடம் பறப்பாங்கண்டல் றோ. க. த. க. பாடசாலை மூன்றாமிடம் ச. ஜென்சன் இலக்கடிப்பிட்டி றோ. க. த. க. பாடசாலை. பிரிவு 2 (ஆண்டு 2, 3) முதலாமிடம் பறப்பாங்கண்டல் (4ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்க்கட்சிகளின் புதிய கூட்டணி;

# பிரேமாவை வீழ்த்த தீவிர முயற்சி!

இலவசஇணைப்பு 1982 தொடக்கம் மண்மீட்புக்காய்உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.

## அதிருப்தியாளருக்கும் முக்கிய பதவிகள்

(கொழும்பு)

பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு எதிராக பொதுவான கூட்டணி ஒன்றை அமைக்கும் முயற்சியில் பல்வேறு எதிர்க்கட்சிகளுக்கிடையில் இணக்கம் ஒன்று காணப்பட்டுள்ளது. பாராளுமன்றத்திற்கு அதிகாரத்தை மீளப்பெறும் வகையில் அரசியலமைப்பை மாற்றுவது என்பதையே பிரதான இலக்கைக் கொண்டதாக இருக்கும் இப்பொதுக் கூட்டணியில் ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தியாளர்களான லலித், காமினி குழுவினருக்கும் முக்கிய பதவிகள் வழங்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகையமுன்னணி அமைவதை முன்னர் அதிகம் விரும்பாத திரு. அநுரா பண்டாரநாயக்காவும் தற்போது இதில் அக்கறை காட்டுவதாக மகஜன நிராஸ் பக்ஷய என்னும் கட்சியைச் சேர்ந்த ராஜா சேனாதிரத்னா பி.பி.ஸி சிங்கள சேவைக்கு வழங்கியபேட்டியில் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இத்தகைய பொதுக்கூட்டணியில் லலித்-காமினி குழுவினருக்கு முக்கிய இடம் ஒதுக்கப்படலாம் எனவும், மேலும் பல ஐ. தே. க அதிருப்தியாளர்கள் இணைந்து கொள்ளலாம் எனவும் குறிப்பிட்டார்.

திரு. ராஜா சேனாதிரத்னா தனது பேட்டியில் மேலும் கூறு (4ஆம் பக்கம் பார்க்க)

## இனத்தின் பாதுகாப்பை கையிலேற்ற வீரப் பெண்கள்

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்குப் பாதுகாப்பில்லை என்பது பேச்சாக இருக்க இனத்தின் பாதுகாப்பையே தங்கள் கைகளில் ஏற்றுள்ள வீரப் பெண்கள் களத்தில் எதிரியுடன் நேருக்கு நேர் சமரிபுரிந்து மாவீரர்களான எம்மினப்பெண்களை அனைவரும் நினைவு கூருவோம் என்று நேற்றைய மாவீரர்நாள் (1991) சஞ்சிமலையில் இருந்து வெளியான பத்திரிகை அறிக்கை தெரிவித்துள்ளது.

உலகெங்கிலும் பெண்கள் மீதான அடக்குமுறையானது பல்வேறு வடிவங்களில் கட்டவிழ்த்து விடப்பட்டு வருகின்றன. வளர்ந்த நாடுகளில் பெண்கள் அடக்குமுறைக்கெதிராகப் போராட பல அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன. வளர்ச்சி இன்றிய நாடுகளில் பெண்கள் தங்களுக்கெதிரான கொடுமைகளை எதிர்கொண்டு போராடுவதில் பலம் குன்றியவர்களாக உள்ளனர்.

ஆணாதிக்கம், சீனக்கொடுமை, பாதுகாப்பின்மை போன்ற சமூகப் பிரச்சினைகளை உடைத்தெறிவதற்கு எவ்வாறு போராடுவது என்பதும் எவ்வாறான போராட்ட வடிவத்தை முன்னெடுப்பது என்பதும் இன்று நடைமுறை சிக்கலுள்ள ஒன்றாகவே இருந்து வருகிறது.

இந்நிலையில் தமிழீழ தாயகத்துக்கான போராட்டத்தில் ஏராளமான பெண்கள்

## சித்திரக் கண்காட்சியில் இராணுவ அட்டூழியம்

(கொழும்பு)

தென்தமிழீழத்தில் இராணுவ அட்டூழியங்களால் ஏற்பட்ட விளைவுகளைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் வரும் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை [illegible] மைதானத்தில் நடைபெற உள்ளது.

இந்த நாட்களில் சிறப்பு நிகழ்ச்சியாக 23 ஆம் திகதி சில கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. கலை நிகழ்ச்சி கள் யாவும் தென்தமிழீழ

## தாய்லாந்து பொறியியலாளர் செஞ்சிலுவையிடம்ஒப்படைப்பு

(கொழும்பு)

தென்தமிழீழத்தில் இராணுவ அட்டூழியங்களால் ஏற்பட்ட விளைவுகளைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் வரும் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை மட்டு நகர்/அம்பாறை தொடர்பகத்தினரால் சித்திரக் கண்காட்சி ஒன்று யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளது.

இந்த நாட்களில் சிறப்பு நிகழ்ச்சியாக 23 ஆம் திகதி சில கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. கலை நிகழ்ச்சிகள் யாவும் தென்தமிழீழ மண்வாசனையைய மக்கள் முன் கொண்டு வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

...பதும் எவ்வளவு தூரம் போராட்ட வடிவத்தை முன்னெடுப்பது என்பதும் இன்று நடைமுறை சிக்கலுள்ள ஒன்றாகவே இருந்து வருகிறது.

இந் நிலையில் தமிழீழ தாயகத்துக்கான போராட்டத்தில் ஏராளமான பெண்கள் இணைந்து கொண்டுள்ளனர். தொடர்ந்து இணைந்தும் வருகின்றனர் ஆண் போராளிகளுக்கு நிகராக ஆயுதமேந்திப் போராடி வருகின்

(3ஆம் பக்கம் பார்க்க)

### புலிகள் பற்றி விபரமறிய

## தமிழகப் பொலிஸார் கொழும்பு வருகை

(சென்னை)

தமிழக பொலிஸ் குழுவொன்று கொழும்பு வந்து புலிகள் பற்றிய தகவல்களை பெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா பொலிசாரிடம் இவர்கள் சில ஆலோசனைகளை பெறுவதற்காக சிறிலங்கா அரசாங்கத்திடம் அனுமதியினை கோரியுள்ளனர் என்றும்.

பொட்டு அம்மான், டானி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## கிரான் சுற்றிவளைப்பு: குடும்பஸ்தர்கள் சித்திரவதை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செட்டிபாளையம் இராணுவ முகாமிலிருந்து கடந்த பத்தாம் திகதியன்று வெளியேறிய இராணுவத்தினர் கிரான் குளம் கிராமத்தைச் சுற்றி வளைத்தனர். அங்கு அப்பிராசா என்னும் இருபத்தேழு வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தரைக் கைது செய்து சித்திரவதை செய்தபின் முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

களுவாஞ்சிக்குடி முகாமிலிருந்து பதினான்காம் திகதியன்று வெளியேறிய இராணுவத்தினர் இருவில் கிராமத்தை சுற்றி வளைத்து ஒன்பது பேரை சித்திரவதை செய்துள்ளனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கிழக்கில் இராணுவம் மீது இரு தாக்குதல்கள்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பாண்டிருப்பு பகுதியில் ரோந்து சென்ற விசேட அதிரடிப் படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர் என்று கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன.

கால்நடையாகச் சென்ற அதிரடிப் பொலிசாரே விடுதலைப் புலிகளின் தாக்குதல்

(3ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்து பொறியியலாளர் செஞ்சிலுவையிடம் ஒப்படைப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் காணாமல் போய்விட்டதாக அறிவிக்கப்பட்ட தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த பொறியியலாளர்கள் இருவரும் நேற்று முன்தினம் மட்டக்களப்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் விடுதலைப் புலிகளால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என ரூபவாஹினி நேற்று அறிவித்தது. கொழும்பிலுள்ள தாய்லாந்து தூதுவர் இதனை ஊர்ஜிதம் செய்துள்ளார்.

மட்டக்களப்பு - பொலநறுவை மாவட்டங்களின் எல்லையோரமான புனாணையில் லக்ஷபானா மின்கோபுர திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த தாய்லாந்து நிறுவனமொன்றின் ஊழியர்கள் நால்வர் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இந்தநால்வரில் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த இரு

(4ஆம் பக்கம் பார்க்க)

## நரசிம்மராவ், சரத்பவார் அமோக வெற்றி

### இடைத்தேர்தலில் காங்கிரஸ் முன்னணியில்

(டில்லி)

இந்தியாவில் நடைபெற்ற பதினைந்து லோக்சபாத் தொகுதிகளுக்கும் ஐம்பத்தாறு சட்டசபைத் தொகுதிகளுக்குமான இடைத் தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. பீகார் மாநிலத்திலுள்ள மூன்று லோக்சபாத் தொகுதிகளில் வாக்குப் பதிவுகளின்போது முறைகேடுகள் நடைபெற்றதாக கூறப்படுவதையொட்டி வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பிக்கப்படவில்லை.

ஆந்திரப் பிரதேசத்திலுள்ள நந்தியால் லோக்சபாத்தொகு

(4ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவபிரிவிற்குள் மாற்றம்; இதுவே எனது முதற்பணி

- சிசில் வைத்தியரெட்ணா

(கொழும்பு)

விசேடமாயிற்சிபெற்ற படைப்பிரிவு ஒன்றைக் கட்டியெழுப்புவதும், ஏற்கனவேயுள்ள இராணுவப்பிரிவிற்குள் மாற்றம் கொண்டுவருவதும் எனது முதற்பணியாக இருக்கும் என கடந்த 15 ஆம் திகதி சிறிலங்கா இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்றுள்ள லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்ணா தெரிவித்துள்ளார்.

செய்தியாளரிடம் பேசிய அவர் இராணுவத்தில் கடுமையான ஒழுங்கும், நேர்மையும் நிலைநாட்டப்படும் என்றும், பேச்சுக்குறைத்து செயலைக் காட்டுவதே தனது தாரகமந்திரமாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் முதலில் கிழக்கு மாகாணத்திலும் பின்னர் வடக்கு மாகாணத்திலும் அர தேர்தலை நடாத்தக்கூடிய சூழலை ஏற்படுத்தக்கூடிய வகையில் இராணுவ நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு மேற்

(3ஆம் பக்கம் பார்க்க)

## டிச. இறுதிக்குள் சார்க் மாநாடு கொழும்பில் நடத்த கயூம் முயற்சி

(கொழும்பு)

ஐந்தாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதற்கு முன்பதாக கொழும்பில் ஆறாவது சார்க் உச்சி மாநாட்டை நடத்துவதற்கு மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கயூம் முழு முயற்சிகளையும் எடுத்துவருகின்றார் என்று கொழும்பிலுள்ள அரசியல் வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

ஐந்தாவது தெற்காசிய சம்மேளன விளையாட்டுப்போட்டிகள் வரும் டிசம்பர் மாதம் 22ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளன.

மாலைதீவு ஜனாதிபதியின் கடிதங்களுடன் நேபாளம்,

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்து கப்பலில் புலிகளுக்கு ஆயுதம்

(சென்னை)

விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை ஏற்றிவரும்போது காரைக்கால்கடலில் பிடிபட்ட "தொன்னோமா" என்ற கப்பல் தாய்லாந்துக்கப்பல் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக்கப்பல் இப்போது சென்னைத் துறைமுகத்தில் ஒதுக்குப்புறமான ஒரு இடத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும்,

இந்தக் கப்பலில் இருந்து கைது செய்யப்பட்ட பத்துப் பேரும் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளார்கள் என்றும், இவர்களில் தமிழகத்தில்

(3ஆம் பக்கம் பார்க்க)

# பொருளாதாரதடை நீக்ககோரி பல். மாணவர் மகஜர்

(யாழ்ப்பாணம்)

உணவு நெருக்கடியையும், பொருளாதாரத் தடையையும் நீக்க உடனடி நடவடிக்கை எடுக்கும்படியும் இங்குள்ள தொழிலாளர்களின் தொழில் பாதிப்பைத் தடுப்பதற்கு கடலில் பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்றும், விவசாய விதை பொருள்களையும்; இடு பொருள்களையும், எரிபொருள்களையும் அனுப்பி வைத்தல் வேண்டும் என்றும், இங்கு நிலவும் மருந்துப் பொருள் தட்டுப்பாட்டை நீக்கி, சுகாதாரச் சீர்கேட்டையும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அம் மகஜரில் கோரப்பட்டிருக்கிறது.

மாணவர்களது அடிப்படைப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் பரீட்சைகளைத் திட்டமிட்டவாறு நடத்தும் படியும், நடைபெறாத பரீட்சைகளையும் நடத்தும் படியும் கோரி யாழ். பல்கலைக்கழக மாணவர் அவையினர் அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் திரு. தேவநேசன் நேசையா அவர்களிடம் மகஜர் ஒன்றை சமர்ப்பித்துள்ளனர்.

1990 ஆம் ஆண்டுக்கான க. பொ. த. உயர்தர, சாதாரணதர பரீட்சைகளை உடனடியாக நடாத்தும் படியும், பொருளாதாரத் தடை, உணவு நெருக்கடி, போன்ற காரணங்களால் மாணவர்களுக்கான மகாபொல உதவிப் பணத்தை இரட்டிப்பாக்கும் படியும் இவ் உதவிப் பணம் கிடைக்காத மாணவர்களுக்கு பொருளாதார உதவிகள் செய்யும் படியும், மாணவர்களுக்குத் தேவையான காகிதாதிகளையும், ஏனைய உபகரணங்களையும் போதிய அளவு அனுப்பி வைக்கும்படியும் கோரப்பட்டிருக்கின்றது.

## தமிழ்த்துறை ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை ஆய்வரங்குத் தொடர் - 4 வரும் புதன்கிழமை 20 ஆம் திகதி பொருளியல் மண்டபத்தில் நடைபெற உள்ளது. இவ் ஆய்வரங்கு பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறும்.

## வவுனியா நகரைச் சூழ கண்காணிப்பு வலயம்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் சிறீலங்கா இராணுவத்தால், நகரத்திற்கு வடபுறமாக தமிழ்க் கிராமங்கள் சிலவற்றை உள்ளடக்கி கண்காணிப்பு வலயம் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்-வவுனியா பிரதான வீதியை அண்டிய பகுதியான சாந்தசோலை தமிழ்க் கிராமத்திலிருந்து மாமடு என்று அழைக்கப்படும் சிங்களக் கிராமம் வரை ஏராளமான காவல் அரண்கள் தொடராக அமைக்கப்பட்டுள்ளன என்றும் நூறுயார் தூரத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள இந்த அரண்களில் இரவும் பகலும் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

சமீபத்தில் வவுனியாவில் ஊரடங்கு சட்டம் அமுல் என்ற அறிவிப்பின் பின்னர் இது மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா - யாழ். பிரதான வீதியைத் தவிர்த்து, மேற்குறிப்பிட்ட கண்காணிப்பு வலயம் ஊடாக போக்குவரத்தை மேற்கொள்வதற்கு இராணுவம் தடைவிதித்துள்ளது.

வவுனியாவில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தவும், தடை செய்யப்பட்டுள்ள பொருள்கள் வடபகுதிக்குக் கொண்டு செல்லப்படுவதை தடுக்கும் நோக்குடனேயே இந்த வலயம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (தி)

## ஆலோசனைக் கூட்டம்

பல வருடங்களாக செயல்படாதிருக்கும், யாழ் மாவட்ட விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தை புனரமைத்து மீள இயங்கச் செய்வதற்கான, ஆலோசனைக் கூட்டம் இன்று திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு தமிழீழ ஆய்வு நிறுவனமையப் பணியக மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு. யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ப. நோ. கூ. சங்கத் தலைவர்களும் கூட்டுறவுத்துறையில் ஆர்வம் உள்ளவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

## முல்லை. அரச ஊழியருக்கு ஒக். சம்பளம் இன்னுமில்லை

முல்லைத்தீவு மாவட்டத்தில் சில அரச திணைக்கள ஊழியர்களுக்கு ஒக்டோபர் மாதச் சம்பளக் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து சம்பளப்பணம்கொண்டு வந்து வழங்கப்படுவது வழக்கம். சங்குப்பிட்டிப் பாதைப் போக்குவரத்துக்குத் தடையானதை அடுத்து அதிகாரிகள் இன்னும் முல்லைத்தீவுக்குச் சம்பளம் எடுத்து வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சில ஊழியர்கள் சொந்த டிப்பாதை வழியாக யாழ்ப்பாணம் சென்று சம்பளப் பணத்தைப் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது (58)

## மாவீரர் நாள் கலை நிகழ்ச்சிகள்

(நமது நிருபர்)

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் மாவீரர் நாள் கொண்டாட்ட வைபவங்களில் கலை நிகழ்ச்சிகளாக, தமிழீழ வீரர்களின் 'மானம் காத்த நாள்'' என்ற வில்லிசையும், 'விலங்குகள் தெறிக்கின்றன' 'காலம் இட்ட கட்டளை' 'கண்திறந்தது' என்ற நாடகங்களும் முல்லை மாவட்டக் கலை-பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளரினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பில் 'மாவீரர் வழியில் லெப்டினன்ட் துர்க்கா' என்ற வில்லிசையும் 'திரும்பிப் பார் ஒரு துரோகியின் சமாதி' என்ற நாடகமும், ஒட்டுசுட்டானில் 'வடக்கா? கிழக்கா? தெற்கா?', 'போர் முனையில் ''தமிழோசை'

## தீர்வுகாண எதிர்க்கட்சிகளும் அரசுடன் ஒத்துழைக்கவேண்டும்

(கொழும்பு)

— அஷ்ரப்

வடக்கிலும், கிழக்கிலும் தோன்றியிருக்கும் பிரச்சினை

பாதுகாப்பிற்காக செலவிடப்படும் பெருந்தொகையான பணத்தை சேமித்து மக்க

## நவம் - 29 ஆண்டு இறுதி பரீட்சை


தேசபக்தர்
பொருளியலாளர்
உயர் திரு. நா. கிருஸ்ணானந்தன்
ஞாபகார்த்த

நினைவுப் பேருரை

இலங்கையில் தமிழ் மன்னர்களின் ஆட்சி
– ஒரு நோக்கு

நிகழ்த்துபவர்:
திரு. ப. புஸ்பரத்தினம்
விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணம்

இடம்: யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு
காலம்: 19 - 11 - 91
செவ்வாய் பி. ப. 4-00 மணி

ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர் கிருஸ்ணானந்தன்
நினைவுப் பணிமன்றம்

(B/3484)



சுயதொழிற் பயிற்சி நெறி

பண்டத்தரிப்பில் திரு. அல்போன்சஸ் என்பவர் மாதம் இருபதினாயிரம் ரூபாவிற்கு மேலாக சுயதொழில் மூலம் வருமானம் பெறுகின்றார்.

அதேபோல் வருமானம் பெறும் தொழில்புரிய ஏன் நீங்கள் முன்வரலாகாது?

ஏன் தொடர்ந்தும் தென்னிலங்கையிலிருந்து சீனியை எதிர்பார்த்து நாம் வாழ வேண்டும்?

வளம் தாராளமாக எமது மண்ணில் உண்டு. மனம் கொண்டு இளைஞர்கள் முன்வந்தால் சீனியில் தன்னிறைவு பெற வசதி உண்டு.

3 மாத காலப்பயிற்சி நெறியில் நீங்கள் தொழில் வல்லுனராகிவிட முடியும்.

மாதம் உணவு, இருப்பிட வசதிகளுடன் 1000 ரூபா ஊக்குவிப்புப்படியும் எம்மால் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 30-11-91.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

பனை தென்னைவள
அபிவிருத்தி ஒன்றியம்,
வண்ணார்பண்ணை,
25, பொன்னப்பாவீதி,
யாழ்ப்பாணம்.

(B/3470)

## தீர்வுகாண எதிர்க்கட்சிகளும் அரசுடன் ஒத்துழைக்கவேண்டும்

— அஷ்ரப்

(கொழும்பு)

வடக்கிலும், கிழக்கிலும் தோன்றியிருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் அரசாங்கமும் எதிர்க்கட்சியினரும் ஒத்துழைக்க வேண்டும் என்று எம். எச். எம் அஷ்ரப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

பாதுகாப்பிற்காக செலவிடப்படும் பெருந்தொகையான பணத்தை சேமித்து மக்களுக்கு நிவாரணமளிப்பதற்கு பயன்படுத்தவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

புளிக்குடியிருப்பில் 'மாவீரர் வழியில் லெப்டினன்ட் துர்க்கா' என்ற வில்லிசையும் 'திரும்பிப் பார் ஒரு துரோகியின் சமாதி' என்ற நாடகமும், ஒட்டுசுட்டானில் 'வடக்கா? கிழக்கா? தெற்கா?', 'போர் முனையில் "தமிழோசை"' ஆகிய நாடகங்களும் கிராமிய நடனம், கவிதை, பட்டிமன்றம் என்பனவும் மாவீரர் நாள் கலைநிகழ்ச்சிகளாக இடம்பெற உள்ளன.

## கையிருப்பை நாளாந்தம் பார்வைக்கு வைக்கவும்

வர்த்தகர்கள் தமது அத்தியாவசிய பொருட்களின் நாளாந்த கையிருப்பு விபரங்களை மக்கள் பார்வைக்கு வைக்குமாறு உதவி அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல மொத்த வியாபாரிகளையும் சில்லறை வியாபாரிகளையும் தங்கள் தங்கள் வசமுள்ள அத்தியாவசியப் பொருட்களின் விபரங்களை நாள்தோறும் மக்களின் பார்வைக்கு வைக்குமாறு யாழ் உதவி அரச அதிபர் கேட்டுள்ளார். (ச)

உள்ளவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

## நவம் - 29 ஆண்டு இறுதி பரீட்சை

யாழ் மாவட்ட பாடசாலைகளில் ஆண்டு இறுதிப் பரீட்சைகள் யாவும் நவம்பர் மாதம் 29, 30 ஆம் திகதிகளில் ஆரம்பித்து டிசம்பர் மாதம் 2, 3, 4 ஆம் திகதிகள் வரை நடாத்தப்பட்டு மாணவர்களுக்கு வகுப்பேற்ற தேர்ச்சி அறிக்கை 6 12.91 இல் வழங்கப்பட வேண்டும் என யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் சகல கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கும் பணித்துள்ளார்.

பாடசாலைகள் தாமே வினாத்தாள்களை தயாரிக்க வேண்டும் எனவும் 1991 இல் ஆரம்பிக்கப்பட்ட க.பொ.த. [உயர்தர] வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கும் இத்தவணைப் பரீட்சை நடாத்தப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.


25, பொன்னப்பாவீதி,
யாழ்ப்பாணம்.

(B/3470)



"எங்கள் தாயவள் கொடியிது"

## கீதப் பயிற்சி

மாவீரர் வாரத்தின்போது தேசியக் கொடியை பாடசாலைகளில் ஏற்றும் வைபவத்தின்போது 'எங்கள் தாயவள் கொடியிது' என்ற கொடியேற்றல் கீதம் இசைக்கப்படவிருக்கின்றது. இக் கீதத்தை இசைப்பது தொடர்பாக ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு கல்வித் திணைக்களமும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளது. செவ்வாய்க்கிழமை கோட்டமட்டத்தில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு சகல சங்கீத ஆசிரியர்களையும் சங்கீத கல்வி அதிகாரி திரு. எஸ். கணபதிப்பிள்ளை கோரியுள்ளார். சங்கீத ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளில் கொடியேற்றப் பாடலை இசைப்பதற்கு பொருத்தமான ஆசிரியர்களை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. பயிற்சி நடக்கும் இடங்கள் பின்வருமாறு.

யா / வைத்தீஸ்வரா வித்தியாலயம் :
காலை 9·00 மணி - யாழ். கோட்டம்
மாலை 2 00 மணி - வேலணைக்கோட்டம்

யா / இராமநாதன் மகளிர் கல்லூரி :
காலை 9 00 மணி - மருதனாமடக் கோட்டம்

யா / அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
காலை 9·00 மணி - வடமராட்சிக்கோட்டம்

யா / சாவகச்சேரி மகளிர் கல்லூரி :
காலை 9·00 மணி - தென்மராட்சிக் கோட்டம்

யா /பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி :
காலை 9·00 மணி - பண்டத்தரிப்புக் கோட்டம்

த. மகாசிவம்
பொதுச்செயலாளர்
இலங்கைத் தமிழர் ஆசிரியச்சங்கம்

(B/3493)



## வீரவேங்கை சோழன்

(ராஜராஜன்)

தனபாலசுப்பிரமணியம் இராஜராஜன்

அவர்களது நினைவஞ்சலி

உதயம்
1975 - 07 - 10

அஸ்தமனம்
1991 - 06 - 23

ஓ!
தியாக தீபமே சோழா!
புனிதத் தாய் மண் மீட்க
ஈரெட்டு ஆண்டுகளில்
இளம் புலியானாய் - மணலாறில்
களப்பலியானாய்
எம் சோகத்தை சுமையாக்கி
உன் ஆத்ம சாந்திக்காய்
உன் பயணம் தொடர்வோம்
தமிழீழம் காண்போம்.

(B/3490)

- குடும்பத்தினர்



## நினைவு கூருகின்றோம்...

1991 - 11 - 18

1984 ஆம் ஆண்டு இத்தினத்தில் சுட்டப்பரசயில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 7 தமிழர்கள்

1988 ஆம் ஆண்டு யாழ். நல்லூர்ப் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சா வெய்திய

இளங்கோ

1989 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளர்

மேஜர் தங்கேஸ் (செபஸ்தியாம்பிள்ளை மரியதாஸ் - சிலாவத்தை, முல்லைத்தீவு)

1990 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சா வெய்திய

விக்னா (தவராசசிங்கம் மகேந்திரகுமார் - அல்லாரை தெற்கு, மீசாலை)

மன்னாரில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

2ஆம் லெப். ஸ்ரனி (அன்ரன் சேவியர் - பனங்கட்டிக்கொட்டு, மன்னார்)

இதே ஆண்டு பாம்புகடித்ததின் காரணமாக எம்மைப்பிரிந்த

சண் (ஜே. அன்சார்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3485)

### சிந்தனைக்கு

பொறுப்பு இல்லாமல், ஆற்றல் இல்லை அதிகாரத்தின் கடைசித் துளியும் கடமையில் அடங்கியுள்ளது.

— ஐயான் மெக்லரன்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 18-11-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# கடமை தவறத் துணைபோதல் தவறு

யாழ். குடா நாட்டில் தற்பொழுது சுமார் 2,25,000 பேர் அகதிகளாகவுள்ளனர். இவர்களைப் பராமரிப்பதிலும் நிவாரணம் வழங்குவதிலும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கணிசமான பங்கு வகிக்கின்றன. அவை தமது சேவையில் தீவிரமாகவும், முனைப்பாகவும் ஈடுபட்டுள்ளன.

இந்த அரச சார்பற்ற நிறுவனங்களில் பல சர்வதேச நிறுவனங்களாகும். மிகவும் பொருளாதாரப் பலம் வாய்ந்தவை. இவற்றில் சில மூன்றாம் உலக நாடுகளின் அரசாங்கங்களுக்கு உதவிகள் வழங்குபவையாகும்.

சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்கள் மீது தொடுத்துள்ள மனிதாபிமானமற்ற நெருக்குதலினாலும்தடைகளினாலும்அல்லலுறும் தமிழ் மக்களுக்கு இந் நிறுவனங்களின் உதவி மிகவும் அவசியமானதென்பதில் சந்தேகமில்லை.

இதேவேளை இந்நிறுவனங்களின் செயற்பாட்டால் சிறிலங்கா அரசாங்கம் தனது கடமையை மற்றவர்கள் தலைகளில் சுமத்திவிட்டு தனது கடமையை தட்டிக்கழிக்கின்றது என்பதையும் மறுப்பதற்கில்லை 'இலங்கைத்தீவு ஒரு நாடு' என்ற கோட்பாட்டை சிறிலங்கா அரசாங்கம் கொண்டிருக்கும்வரை இங்குள்ள சகலருக்கும் உணவளிப்பது சிறிலங்கா அரசாங்கத்தின் கடமையாகும். இது சிறிலங்கா அரசாங்கம் இலகுவில், சுலபமாகத் தட்டிக்கழித்துவிட முடியாத ஒரு விவகாரமாகும்.

ஆனால் சிறிலங்கா அரசாங்கம் இதனைத் தட்டிக்கழித்து வருகின்றது. யாழ். மாவட்ட மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களில் சிறுபகுதியையே சிறிலங்கா அரசாங்கம் அனுப்பி வந்தது. கப்பல்கள் மூலம் குடா நாட்டிற்கு தேவையான அளவில் சுமார் மூன்றில் ஒரு பங்கு உணவை அரசாங்கம் அனுப்பியதாக தரவுகள் வெளியிடப்படினும் உண்மையில் அரசாங்கம் அனுப்பிய உணவின் அளவு அதைவிடக் குறைவாகும்.

சராசரியாக மாதாந்தம் வடபகுதிக்கு மூன்று கப்பல்களில்வந்த பொருள்கள் அனைத்தும் அரசாங்கத்திற்குச் சொந்தமானவையல்ல. இவற்றில் ஒருபகுதி அரச சார்பற்ற நிறுவனங்களினதும், தனியாருக்குச் சொந்தமானவையுமாகும். ஆனால் அரசாங்கம் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் வடக்கே அனுப்பப்படும் கப்பல்களின் எண்ணிக்கையையும் அனுப்பப்படும் பொருள்களின் மொத்த அளவையும் தானே முழுமையாக அனுப்புவதாக பெரியளவில் பிரசாரம் செய்து வந்தது. அத்தோடு யாழ். செயலகத்திற்கு வந்து சேர்ந்த உணவில் ஒரு பகுதியை அரச சார்பற்ற நிறுவனங்கள் கொள்வனவு செய்தும் உள்ளன.

இவ்வாறான நடவடிக்கைகள் சிறிலங்கா அரசாங்கம் தனது கடப்பாட்டில் இருந்து தப்புவதற்கு உதவுவதோடு போலியான பிரசாரங்கள் மூலம் அரசியல் லாபம் ஈட்டவும் உதவுவதாகவுள்ளது. ஒருவகையில் அரச சார்பற்ற நிறுவனங்களை அரசாங்கம் பயன்படுத்திக்கொள்கிறது என்றும் கூறலாம். இதனை சிறிலங்கா அரசாங்கம் தனது கடமையில் இருந்து விலகுவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் சந்தர்ப்பம் எனக் கூறினாலும் மறுத்துரைக்க முடியாது.

இந்நிலையில் இதனைத் தடுக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது நிவாரண நடவடிக்கைகளுக்கான அத்தியாவசியப் பொருள்களை தனியாக வரவழைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்காக தனியான கப்பல்களை ஏற்பாடு செய்து கொள்ளலாம். தேவை ஏற்படின் தனியார் வர்த்தகர்களையும் தம்முடன் சேர்த்துக் கொள்ளலாம். அரச சார்பற்ற நிறுவனங்கள் [illegible]

# பாக்.கின் அணுவாயுத திட்டத்தால் சமரசத்திற்கு இடமில்லை

## நவாப் ஷெரீப்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அணு ஆயுத திட்டம் குறித்து எந்தவித சமரசத்தையும் ஏற்காது என்று பாகிஸ்தானிய பிரதமர் நவாப் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத்தில் ஷெரீப்பின் அறிவிப்பைத் தொடர்ந்து பாகிஸ்தானிய வெளியுறவுச் செயலகம் அமெரிக்காவின் உதவியின்றி பாகிஸ்தானால் செயல்பட முடியும் என்றும் தமது அணுசக்தி நிலையங்களை சர்வதேச மேற்பார்வைக்காக திறந்துவிடப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளது.

முன்னதாக அமெரிக்க துணை பாதுகாப்பு அமைச்சர் பாகிஸ்தானின் அணு ஆயுத திட்டம் குறித்து ஒழிவு மறைவின்றிய விளக்கமொன்றினை அமெரிக்காவிடம் சமர்ப்பிக்குமாறு பாகிஸ்தானைக் கேட்டிருந்தார்.

அதனுடன் பாகிஸ்தானின் அக்கபூர்வமான பதிலிலேயே பாகிஸ்தானுக்கான இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு அமைந்துள்ளதாகவும்.

இது தொடர்பாக மேலும் விவாதிக்க உயர் அதிகாரிகள் சிலருடன் அடுத்த வருடம் இஸ்லாமாபாத் செல்ல விருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சென்ற ஆண்டு பாகிஸ்தானுக்கான நிதியை அமெரிக்கா அணு ஆயுத பிரச்சினை தொடர்பாகவே நிறுத்தி வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுடன் நட்புறவில் எந்த மாறுதலும் இல்லை

## -கொர்பசேவ்

(மொஸ்கோ)

இந்தியாவுடன் கொண்டுள்ள நட்புறவில் எந்தவிதமான கொள்கை மாறுதலும் இல்லை என்று சோவியத் அதிபர் மிகையில் கொர்பசேவ் உறுதி கூறியுள்ளார்.

சோவியத் யூனியனுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவ் சிங் சோலங்கியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திய பின்னர் சோவியத் அதிபர் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார். திரு சோலங்கி மொஸ்கோவில் ரஷ்யக் குடியரசின் அதிபர் பொரிஸ் யெல்சின் வெளியுறவு அமைச்சர் டொமினின் உட்பட பலதலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளார். முன்னதாக கிரெம்ளினில் சோலங்கியுடன் பேசிய அதிபர் கொர்பசேவ் இந்தியாவுடனான சோவியத் உறவுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை எனக் குறிப்பிட்டார்.

# ஈரானின் உறுதிப்பாட்டில் அமெரிக்கா சந்தேகம்

அணுசக்தியை அமைதிப் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்துவதான ஈரானின் உறுதிப்பாட்டை தாம் சந்தேகிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஆதலால் ஈரானுக்கு அணு ஆயுதப் பொருள்கள் எதனையும் விற்பனை செய்யக் கூடியவர்கள் விற்க வேண்டாம் என்றும் அமெரிக்கா கேட்டுள்ளது.

# பிரதமர் நரசிம்மராவிற்கு சார்க் பற்றி அக்கறையில்லை

## ஏசியாவீக் தகவல்

(கொழும்பு)

பூட்டான் மன்னரின் சிறிய இமாலய இராச்சியம் இன அமைதியின்மைக்கு உட்பட்டிருப்பதால் பூட்டான் மன்னர் சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை என்பதை ஏசியா வீக் சஞ்சிகை ஒப்புக் கொள்கிறது.

அதே சமயம் ஏசியா வீக் இந்தியா மீதும் குறை கூறியுள்ளது. இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தலைமைக்கு மிகவும் சிக்கலான நிலையில் நாட்டைவிட்டு வெளியேறத் தயக்கம் காட்டினார் என்று தெரிவிக்கிறது.

கொழும்பில் நடக்கவிருந்த சார்க் மாநாடுபற்றி இந்தியப் பிரதமர் அதிகமாகக் கவலை கொள்ளவில்லை. ஆந்திரப் பிரதேசத்தில் நடைபெறும் இடைக்காலத் தேர்தலில் தனது தொகுதியில் வெற்றி பெறுவது குறித்து அவர் அதிகம் அக்கறை கொண்டிருந்தார் என்றும் ஏசியா வீக் கருத்து தெரிவித்திருக்கிறது. சார்க் இப்பொழுதான் சிறகடித்துப் பறக்கத் தொடங்கியிருக்கிறது என்று ஏசியா வீக் மேலும் கூறுகிறது.

# கடவுச்சீட்டு விண்ணப்பம்

(கொழும்புத்துறை)

கடவுச்சீட்டு விண்ணப்பப் படிவங்கள் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் யாழ்.செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

இப்படிவங்களைப் பெற விரும்புவோர் யாழ். செயலக புத்தகசாலையில் தமது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து இலவசமாக ஒருவர் ஒரு படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என அப்பிரிவைச் சேர்ந்த பிரதம லிகிதர் தெரிவித்துள்ளார். (24)

## வேலூர் சம்பவம்

# சிறைக்காவலர் 14 பேர் வேலை நீக்கம்

வேலூர் மத்திய சிறைச் சாலையில் ஆயுள் தண்டனைக் கைதிகள் தப்பியது தொடர்பாக உதவி ஜெயிலர் உட்பட பன்னிரண்டு சிறைக் காவலர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம்வேலூர் மத்திய சிறையிலிருந்து ஆயுள் தண்டனை விதித்திருந்த இலங்கையர் இருவர் உட்பட எட்டுப்பேர் சுவரைப் பிரித்து தப்பியோடியது தெரிந்ததே.

இது தொடர்பாக தப்பியோடியவர்களை பிடிப்பதற்கு தனிப் பொலிஸ் படை அமைக்கப்பட்டிருப்பதாகவும். எல்லாக் காவல் நிலையங்களுக்கும் தகவல் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தமிழக காவல் துறை அறிவித்துள்ளது

தாய்லாந்து [illegible]

எந்தவொரு நடவடிக்கையிலும் சம்பந்தப்படாத நால்வர் சென்னை நகர உப சிறையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் ஏனைய அறுவரும் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் தமிழகக் காவல் துறை தெரிவித்துள்ளது.

சந்திரசாமி என்றழைக்கப்படும் விடுதலைப் புலி இயக்கத்தவரே இதற்கான சகல ஒழுங்குகளையும் செய்தவர் என்றும், பல்வேறு கட்டங்களில் சந்திரசாமியால் வழி நடாத்தப்பட்ட இவர்கள் கொழும்பிலிருந்தும், சென்னையிலிருந்தும் விமானம் மூலம் பாங்கொக்கிற்கும், சிங்கப்பூருக்கும் கூட்டிச்செல்லப்பட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகப் [illegible]

யல், திலீபன், காந்தன், ரமணன், குஞ்சன் அல்லது ராஜன் ஆகிய விடுதலைப் புலிகள் பற்றியே தமிழக பொலிசார் விசேட கவனம் செலுத்துகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

டிச. இறுதிக்குள் [illegible]

பூட்டான் சென்றுள்ள மாலைதீவு வெளியுறவுத்துறை அமைச்சர் பாதுல்லாஜமீல் பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டு இந்தியா சென்று பிரதமர் பி.வி. நரசிம்மராவை சந்தித்து சார்க் உச்சி மாநாட்டிற்கான புதிய திகதியை நிச்சயிப்பர் என்றும் கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கின்றன.

# ஆங்கில தினம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக்கல்லூரியில் இன்று திங்கட்கிழமை ஆங்கில தினம் நடைபெறவுள்ளது. இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) துரை தியாகராசா கலந்து கொள்வார்.

இராணுவ [illegible]

கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் 1985, 86ஆம் ஆண் [illegible]

இனத்தின் [illegible]

றனர். எதிரியுடன் நேருக்கு நேர் மோதலில் கூட ஆண் [illegible]

டையிலுள்ள இவரது வீட்டிற்குச் சென்ற போது காயமடைந்த ஐந்து விடுதலைப் புலிகளையும் பொலிசார் கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## எழுச்சிக் கூட்ட ஏற்பாடுகள் வவுனியாவில் பூர்த்தி

(நமது நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் மாவீரர் தின எழுச்சிக் கூட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன என்று வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

21-11-91 முதல் 27-11-91 வரையான மாவீரர் நாள் கூட்டங்களுக்கும், 26ஆம் திகதி மாவீரர் துயிலும் இல்லங்களில் ஒளி ஏற்றுவதற்கான ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன என்றும் அவர் அறிவித்துள்ளார்.

## இனவிகிதாசார முறையில் 59, 000 ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)

கடந்த மூன்று வருடங்களில் இன விகிதாசார அடிப்படையில் 59, 000 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்று அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை நிர்வாகக் குழுவின் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கிலும் கூட ஆசிரிய நியமனத்தின் போது இன விகிதாசார முறையே பின்பற்றப்படுவதாகவும் அவர் கூறினார்.

படித்து விட்டு வேலைவாய்ப்பின்றி இருந்த 7953 பட்டதாரிகளுக்கு மாதாந்தம் 2000 ரூபாய் சம்பளத்தில் வேலை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## கம்போடியாவுடன் உறவு; ஆசியான் நாடுகள் முடிவு

(மணிலா)

கம்போடியாவை ராஜரீக ரீதியாக அங்கீகரித்து அதனோடு ராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதென ஆசியான் நாடுகள் முடிவுசெய்துள்ளன. சிங்கப்பூர், மலேசியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா என்பவற்றை உள்ளடக்கிய ஆசியான் நாடுகள் இம்முடிவை மேற்கொண்டிருப்பதாக நேற்று மணிலாவில் பிலிப்பைன்ஸ் வெளியுறவு அமைச்சர் அறிவித்தார்.

இதேவேளை கமரூச் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களாக இருந்த பலரும் பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது கம்போடியத் தலைநகர் நொம்பென்னுக்குத் திரும்பி வருவதாகவும் தெரியவந்துள்ளது.

ஏவுகணை தொழில் நுட்பம்

## அணைத்துலககட்டுப்பாட்டை சீனா ஏற்றுச் செயற்படும்

ஏவுகணை தொழில் நுட்ப அறிவை ஏனைய

இதேவேளை நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட அகதி முகாம்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காக சம்பந்தப்பட்ட சகல அரச சார்பற்ற நிறுவனங்களையும் சுகாதார அதிகாரிகளையும், கிராம அலுவலர்களையும் இன்று திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு தமது அலுவலகத்தில் நடைபெறும் கூட்டமொன்றில் கலந்து கொள்ளுமாறும் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் அழைப்பு விடுத்துள்ளார்.

வவுனியா

தெரிவிக்கின்றன.

தற்பொழுது நிலவும் நிதி நெருக்கடி அரசின் சாதாரண நடவடிக்கைகளை மட்டுப்படுத்தியுள்ளது. திறைசேரி

நிலையில் புதிய ... திட்டம் எதையும் அரசு நடைமுறைப்படுத்தும் என்று எதிர்பார்க்க முடியாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## புகையிரதத் திணைக்களம்; தனியாரிடம் ஒப்படைப்பு?

(யாழ்ப்பாணம்)

புகையிரதத் திணைக்களத்தையும் தனியார்மயப்படுத்துவதற்குச் சிறிலங்கா அரசு திட்டமிட்டுவருகின்றது.

இத்திணைக்களத்தைத் தனியார் மயப்படுத்துவதில் உள்ள உசித நிலைமைகள் தொடர்பாக அரசு தற்பொழுது ஆராய்ந்துவருகின்றது.

பஸ் போக்குவரத்தை அரசு தனியார்மயப்படுத்தியிருப்பது அரசுக்குச் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்பட்டுவருகின்றது. இதனால் மேற்படி திணைக்களத்தையும் தனியார் மயப்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டுவருவதாகத் தெரியவருகின்றது. (ஐ)

## நான்கு கிராமங்கள் பிரதான வீதி பாவிக்க தடை

(யாழ்ப்பாணம்)

வவுனியாவின் நான்கு கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் யாழ் - வவுனியா பிரதான வீதி ஊடாக வவுனியா நகரப் பகுதிக்கான போக்குவரத்தை மேற்கொள்வதற்கு சிறிலங்கா இராணுவம் தடை விதித்துள்ளது.

சமீபத்திய இராணுவ அச்சுறுத்தல் காரணமாக இடம்பெயர்ந்து சென்ற தம்பனைச்சோலை, சாந்தசோலை ஆகிய இரு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மீளச் சென்று தமது கிராமங்களில் குடியமர்ந்தனர். இந்த இரு கிராமங்களைச் சேர்ந்தவர்களும், பெரியார் குளம், மகாறம்பைக் குளம் ஆகிய இரு கிராமங்களைச் சேர்ந்தவர்களும் மேற்படி வீதி வழியாக போக்குவரத்தை மேற்கொள்வதற்கு இராணுவம் தடை விதித்துள்ளது.

மேற்படி கிராமங்களைச் சேர்ந்தவர்கள் பூந்தோட்டம் இராணுவ சோதனை நிலையம் ஊடாகவே நகரத்திற்கான போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)

## கொட்டும் மழையிலும் மாவீரர் தின ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையைப் பொருட்படுத்தாது, மக்கள் அணி அணியாக நின்று வளைவுகள், பந்தல்கள் அமைத்து மாவீரர் வார ஏற்பாடுகளை கவனித்து வருகின்றனர்.

மாவீரர் பெற்றோரைக் கௌரவிக்கும் முன்னேற்பாடான வேலையினை மகளிர் அமைப்புகள் உணர்வு பூர்வமாக செய்துகொள்வதை காணக்கூடியதாக உள்ளது. கிராம மட்டத்திலான சில நிகழ்ச்சிகள் முடிவுற்று, மாவீரர் தினத்தன்று பரிசில்கள் வழங்கும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இயற்கை வளங்களை அழிக்காமல், பனை ஓலை, தோரணங்கள் செய்து வர்ணங்கள் பூசி, மாவீரர் தினங்களில் வாடாமல் இருக்கும் வண்ணம் அலங்காரம் செய் திருப்பதை காணக் கூடியதாக இருந்தது.

### எதிர்க்கட்சிகளின் கையில்

இதுவரை காலமும் அநுரா இத்தகைய கூட்டணி அமைப்பதில் விருப்பமின்றி இருந்தாரென்றும் இதன் காரணமாகவே சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கும், மகன் அநுராவிற்குமிடையே

### நரசிம்மராவ்

தியில் போட்டியிட்ட பிரதமர் பி. வி. நரசிம்மராவ் ஐந்து இலட்சத்து எண்பதினாயிரத்திற்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்திலும், மகாராஷ்டிரா மாநிலத்தில் பாராமதி லோக்சபாத் தொகுதியில் போட்டியிட்ட பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றுள்ளனர். உத்தரப்பிரதேசம் அமேதி தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் சதிஷ் சர்மா ஐம்பதினாயிரத்திற்கும் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் முன்னணியில் உள்ளாரென நள்ளிரவு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாவா லோக்சபாத் தொகுதியில் ஜனதா சமாஜக் கட்சித் தலைவர் கன்சிராம் ஆறாயிரம் வாக்குகள் வித்தியாசத்திலும், புல்சர் லோக்சபாத் தொகுதியில் பாரதிய ஜனதாவைச் சேர்ந்த சங்கர் பால் முன்னிலையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. மத்திய பிரதேசத்திலும் ஒரிசாவிலும் தலா ஒவ்வொரு லோக்சபாத் தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்றுள்ளது.

### 1991 மாவீரர் நாள்

றோ. க. த. க. பாடசாலை
இரண்டாமிடம் இ. மரிசால்

## 59, 000 ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)

கடந்த மூன்று வருடங்களில் இன விகிதாசார அடிப்படையில் 59, 000 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்று அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை நிர்வாகக் குழுவின் தலைவர் ஜோர்ஜ் மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கிலும் கூட ஆசிரிய நியமனத்தின் போது இன விகிதாசார முறையே பின்பற்றப்படுவதாகவும் அவர் கூறினார்.

படித்து விட்டு வேலைவாய்ப்பின்றி இருந்த 7953 பட்டதாரிகளுக்கு மாதாந்தம் 2000 ரூபாய் சம்பளத்தில் வேலை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## கம்போடியாவுடன் உறவு; ஆசியான் நாடுகள் முடிவு

(மணிலா)

கம்போடியாவை ராஜரீக ரீதியாக அங்கீகரித்து அதனோடு ராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதென ஆசியான் நாடுகள் முடிவுசெய்துள்ளன. சிங்கப்பூர், மலேசியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா என்பனவற்றை உள்ளடக்கிய ஆசியான் தாமன இம்முடிவை மேற்கொண்டிருப்பதாக நேற்று மணிலாவில் பிலிப்பைன்ஸ் வெளியுறவு அமைச்சர் அறிவித்தார்.

இதேவேளை கமருச் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களாக இருந்த பலரும் பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது கம்போடியத் தலைநகர் நொம்பென்னுக்குத் திரும்பி வருவதாகவும் தெரியவந்துள்ளது

ஏவுகணை தொழில் நுட்பம்

## அனைத்துலககட்டுப்பாட்டை சீனா ஏற்றுச் செயற்படும்

ஏவுகணை தொழில் நுட்ப அறிவை ஏனைய நாடுகளுக்கு வழங்குவது தொடர்பாக ஆயுதக் கட்டுப்பாடு குறித்த அனைத்துலகக் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்க சீனா முன்வந்திருப்பதாக, அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் அறிவித்துள்ளார்.

சீனத் தலைநகர் பீக்கிங்கிற்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் சீனத் தலைவர்களுடன் நடத்திய பதினெட்டு மணி நேரப் பேச்சுக்களின் போது கடுமையாக வற்புறுத்தியதைத் தொடர்ந்து சீனா தற்காலிகமாக இம்முடிவை மேற்கொண்டிருப்பதாக பேக்கர் தெரிவித்தார்.

இதன்படி சீனா சிரியாவுக்கு வழங்க ஒப்புக் கொண்ட எம் ஒன்பது ரக ஏவுகணைகளையும், பாகிஸ்தானுக்கு வழங்க ஒப்புக் கொண்ட எம் பதினொன்று ரக ஏவுகணைகளையும், நிறுத்தி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் சீனாவில் ஜனநாயக மீட்புப் போராட்டங்களில் பங்குகொண்டமையால் கைது செய்யப்பட்டவர்களில் கொலைக் குற்றம் சாட்டப்படாத எண்ணூறு பேர் அமெரிக்கா செல்ல சீனா சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் பேக்கர் குறிப்பிட்டார்'

## தமிழ் நாட்டில் வெள்ளம்;

## பிரதான வீதி பாவிக்க தடை

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் நான்கு கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் யாழ் - வவுனியா பிரதான வீதி ஊடாக வவுனியா நகரப் பகுதிக்கான போக்குவரத்தை மேற்கொள்வதற்கு சிறிலங்கா இராணுவம் தடை விதித்துள்ளது.

சமீபத்திய இராணுவ அச்சுறுத்தல் காரணமாக இடம் பெயர்ந்து சென்ற தம்பனைச் சோலை, சாந்தசோலை ஆகிய இரு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மீளச் சென்று தமது கிராமங்களில் குடியமர்ந்தனர். இந்த இரு கிராமங்களைச் சேர்ந்தவர்களும், பெரியார் குளம், மகாறம்பைக் குளம் ஆகிய இரு கிராமங்களைச் சேர்ந்தவர்களும் மேற்படி வீதி வழியாக போக்குவரத்தை மேற்கொள்வதற்கு இராணுவம் தடை விதித்துள்ளது.

மேற்படி கிராமங்களைச் சேர்ந்தவர்கள் பூந்தோட்டம் இராணுவ சோதனை நிலையம் ஊடாகவே நகரத்திற்கான போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)

## கொட்டும் மழையிலும் மாவீரர் தின ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையைப் பொருட்படுத்தாது, மக்கள் அணி அணியாக நின்று வளைவுகள், பந்தல்கள் அமைத்து மாவீரர் வார ஏற்பாடுகளை கவனித்து வருகின்றனர்.

மாவீரர் பெற்றோரைக் கௌரவிக்கும் முன்னேற்பாடான வேலையினை மகளிர் அமைப்புகள் உணர்வு பூர்வமாக செய்துகொள்வதை காணக்கூடியதாக உள்ளது. கிராம மட்டத்திலான சில நிகழ்ச்சிகள் முடிவுற்று, மாவீரர் தினத்தன்று பரிசில்கள் வழங்கும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இயற்கை வளங்களை அழிக்காமல், பனை ஓலை, தோரணங்கள் செய்து வர்ணங்கள் பூசி, மாவீரர் தினங்களில் வாடாமல் இருக்கும் வண்ணம் அலங்காரம் செய் திருப்பதை காணக்கூடியதாக இருந்தது.

எதிர்க்கட்சிகளின் கையில்

இதுவரை காலமும் அநுரா இத்தகைய கூட்டணி அமைப்பதில் விருப்பமின்றி இருந்தாரென்றும் இதன் காரணமாகவே சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கும், மகன் அநுராவிற்குமிடையே கருத்துவேறுபாடுகள் நிலவியதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் இப்பொதுக்கூட்டணியின் நோக்கம் தற்போதைய அரசின் சர்வாதிகாரப்போக்கை இல்லாமல்செய்து பாராளுமன்றஜனநாயக முறையை ஏற்படுத்துவதே அல்லாமல் ஆட்சியை அமைப்பதல்ல என்றும் தெரிவித்தார்.

அமையவிருக்கும் பொதுக் கூட்டணியில் அரசாங்கத்திற்கெதிரானஎதிர்க்கட்சிகளுடன் ஐ.தே.கவில் இருக்கும் பல அதிருப்தியாளர்களும் இணையக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

வேறொரு கேள்விக்கும் பதிலளிக்கையில் லலித்-காமினி குழுவினருக்கும் பொதுக்கூட்டணியில் முக்கிய இடம் வழங்கப்படலாம் எனக் கூறினார்.

இத்தகைய பொதுக் கூட்டணி தொடர்பாக தமிழர் கட்சிகள், மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் பலவற்றுடன் ஆலோசனை செய்யப்பட்ட

தாய்லாந்து பொறி

பொறியியலாளர்களையும் விடுதலைப்புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்துள்ளனரெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் காணாமல் போனது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாகச் சிறிலங்கா அரசாங்கம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் தாய்லாந்து நாட்டவர்களான இரு பொறியியலாளர்களையும் நேற்று முன்தினம் விடுதலை செய்துள்ளதாக அச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இருந்த போதிலும் இவர்களோடு காணாமல் போன இரண்டு சிங்களத் தொழிலாளர்களும் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. சிங்களத் தொழிலாளர்களின் விடுதலை சம்பந்தமாகவும் சிறிலங்கா அரச அதிகாரிகள் சர்வதேச

தொடர்பாக ஆராயப்பட்டுவருவதாகத் தெரிய வருகின்றது. (க)

நரசிம்மராவ்

தியில் போட்டியிட்ட பிரதமர் பி.வி. நரசிம்மராவ் ஐந்து இலட்சத்து எண்பதினாயிரத்திற்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்திலும், மகாராஷ்டிரா மாநிலத்தில் பாராமதி லோக்சபாத் தொகுதியில் போட்டியிட்ட பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றுள்ளனர். உத்தரப்பிரதேசம் அமேதி தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் சதிஷ் சர்மா ஐம்பதினாயிரத்திற்கும் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் முன்னணியில் உள்ளாரென நள்ளிரவு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாவா லோக்சபாத் தொகுதியில் கசுஜன் சமாஜக் கட்சித் தலைவர் கன்சிராம் ஆறாயிரம் வாக்குகள் வித்தியாசத்திலும், புனசர் லோக்சபாத் தொகுதியில் பாரதிய ஜனதாவைச் சேர்ந்த சங்கர்பால் முன்னிலையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. மத்திய பிரதேசத்திலும் ஒரிசாவிலும் தலா ஒவ்வொரு லோக்சபாத் தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்றுள்ளது.

### 1991 மாவீரர் நாள்

றோ. க. த. க. பாடசாலை

இரண்டாமிடம் இ. மரிசால் வட்டக்கண்டல் அ. த. க. பாடசாலை

மூன்றாமிடம் பா. சிந்துஜா மடு அகதிமுகாம் பாடசாலை

பிரிவு 3 (ஆண்டு 4,5) முதலாமிடம் மு. தயாநந்தி விளாங்குளி அ. த. க. பாடசாலை

இரண்டாமிடம் றோ. மேரி ஜக்குலின் பறப்பாங்கண்டல் றோ. க. த. க. பாடசாலை

மூன்றாமிடம் லூ சேமின் டிலோசனா, மடு அகதிமுகாம் பாடசாலை

பிரிவு 4 (ஆண்டு 6) முதலாமிடம் இ. விஜிதா உயிலங்குளம் றோ. க. த. க. பாடசாலை

இரண்டாமிடம் ஜே. சிறிசாந்தினி கருங்கண்டல் றோ. க. த. க. பாடசாலை

மூன்றாமிடம் ப ஜெனிற்றா வட்டக்கண்டல் அ.த.க.பாடசாலை

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த முப்பத்தைந்து பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்